ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

நான்காம்பத்து

______________

4-ஆம் திருமொழி - நாவகாரியம்

_______*________

* நாவகாரியம்சொல்லிலாதவர் நாள்தொறும்விருந்தோம்புவார் *
தேவகாரியம்செய்து வேதம்பயின்றுவாழ்திருக்கோட்டியூர் *
மோவர்காரியமும்திருத்தும் முதல்வனைச்சிந்தியாத * அப்
பாவகாரிகளைப்படைத்தவன் எங்ஙனம்படைத்தான்கொலோ! (1)

குற்றமின்றிக்குணம்பெருக்கிக் குருக்களுக்குஅனுகூலராய் *
செற்றமொன்றுமிலாத வண்கையினார்கள்வாழ்திருக்கோட்டியூர் *
துற்றியேழுலகுண்ட தூமணிவண்ணந்தன்னைத்தொழாதவர் *
பெற்றதாயர்வயிற்றினைப் பெருநோய்செய்வான்பிறந்தார்களே. (2)

வண்ணநல்மணியும்மரதகமும்அழுத்தி நிழலெழும்
திண்ணைசூழ் * திருக்கோட்டியூர்த் திருமாலவந்திருநாமங்கள் *
எண்ணக்கண்டவிரல்களால் எறைப்பொழுதும்எண்ணிகிலாதுபோய் *
உண்ணக்கண்டதம்ஊத்தைவாய்க்குக் கவளமுந்துகின்றார்களே. (3)

உரகமெல்லணையான்கையில் உறைசங்கம்போல்மடவன்னங்கள் *
நிரைகணம்பரந்தேறும் செங்கமலவயல்திருக்கோட்டியூர் *
நரகநாசனைநாவில்கொண்டழையாத மானிடசாதியர் *
பருகுநீரும்உடுக்குங்கூறையும் பாவம்செய்தனதங்கொலோ! (4)

ஆமையின்முதுகத்திடைக்குதிகொண்டு தூமலர்சாடிப்போய் *
தீமைசெய்துஇளவாளைகள் விளையாடுநீர்த்திருக்கோட்டியூர் *
நேமிசேர்தடங்கையினானை நினைப்பிலாவலிநெஞ்சுடை *
பூமிபாரங்களுண்ணும்சோற்றினைவாங்கிப் புல்லைத்திணிமினே. (5)

பூதமைந்தொடுவேள்வியைந்து புலன்களைந்துபொறிகளால் *
ஏதமொன்றுமிலாத வண்கையினார்கள்வாழ்திருக்கோட்டியூர் *
நாதனைநரசிங்கனை நவின்றேத்துவார்களுழக்கிய *
பாததூளிபடுதலால் இவ்வுலகம்பாக்கியம்செய்ததே. (6)

குருந்தமொன்றொசித்தானொடும்சென்று கூடியாடிவிழாச்செய்து *

திருந்துநான்மறையோர் இராப்பகல்ஏத்திவாழ்திருக்கோட்டியூர் *
கருந்தடமுகில்வண்ணனைக் கடைக்கொண்டுகைதொழும்பத்தர்கள் *
இருந்தவூரிலிருக்கும்மானிடர் எத்தவங்கள்செய்தார்கொலோ! (7)

நளிர்ந்தசீலன்நயாசலன் அபிமானதுங்கனை, நாள்தொறும் *
தெளிந்தசெல்வனைச்சேவகங்கொண்ட செங்கண்மாலதிருக்கோட்டியூர் *
குளிர்ந்துறைகின்றகோவிந்தன் குணம்பாடுவாருள்ளநாட்டினுள் *
விளைந்ததானியமும் இராக்கதர்மீதுகொள்ளகிலார்களே. (8)

கொம்பினார்பொழில்வாய்க் குயிலினம்கோவிந்தன்குணம்பாடுசீர் *
செம்பொனார்மதிள்சூழ் செழுங்கழனியுடைத்திருக்கோட்டியூர் *
நம்பனைநரசிங்கனை நவின்றேத்துவார்களைக்கண்டக்கால் *
எம்பிராந்தனசின்னங்கள் இவரிவரென்றுஆசைகள்தீர்வனே. (9)

காசின்வாய்க்கரம்விற்கிலும் கரவாதுமாற்றிலிசோறிட்டு *
தேசவார்த்தைபடைக்கும் வண்கையிரார்கள்வாழ்திருக்கோட்டியூர் *
கேசவா! புருடோத்தமா! கிளர்சோத்யாய்! குறளா! என்று *
பேசுவார்அடியார்கள் எந்தம்மைவிற்கவும்பெறுவார்களே. (10)

* சீதநீர்புடைசூழ் செழுங்கழனியுடைத்திருக்கோட்டியூர் *
ஆதியானடியாரையும் அடிமையின்றித்திரிவாரையும் *
கோதில்பட்டர்பிரான் குளிர்ப்புதுவைமன்விட்டுணுசித்தன்சொல் *
ஏதமின்றிஉரைப்பவர் இருடீகேசனுக்காளரே. (11)

அடிவரவு: நாவகாரியம் குற்றம் வண்ணம் உரகம் ஆமை பூதம் குருந்தம் நளிர்ந்த கொம்பின் காசின் சீதநீர் ஆசைவாய்